# அரசாங்க அறிவித்தல்

## 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்

2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 6(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 08 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இவ்வொழுங்கு விதி மூலம் பின்வரும் கட்டளையினைப் பிரகடனப்படுத்துகிறேன். மேற்குறித்த கட்டளையானது 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ...08... ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும்.

மங்கல சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு – 01.
2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ...07... ஆந் திகதி

### ஒழுங்குவிதிகள்

1. இந்த ஒழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, நிதி (தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக அறவீடு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதிய 1451/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதிய 1455/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2006 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 05 ஆந் திகதிய 1465/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் என்பனவற்றின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி (தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக அறவீடு) ஒழுங்குவிதிகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

3. 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி II இன் (இதனகத்து பின்னர் "சட்டம்" என குறிப்பீடு செய்யப்படும்) நியதிகளுக்கு அமைவாக செயளாலரினால் விதிக்கப்பட்ட தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக அறவீடு (இதனகத்து பின்னர் "அறவீடு" என குறிப்பீடு செய்யப்படும்), இந்த ஒழுங்கு விதிகள் பயன்வலுப்பெறும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும்;

(அ) ஒவ்வொரு தொலைக்காட்சி நாடகம் அல்லது திரைப்படம் ஒன்று தொடர்பிலும் குறித்த தொலைக்காட்சி நாடகம் அல்லது திரைப்படம் அவை ஒளி.்.ஒலி பரப்பப்படுகின்ற காலத்திற்கு நேரொத்த வகையில் இக்கட்டளைகளின் I ஆம் அட்டவைணயில் பகுதி (i) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதத்திற்கு அமையவும், அத்துடன்,

(ஆ) ஒவ்வொரு வர்த்தக விளம்பரங்கள் மீதும், இந்த ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இன் பகுதி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய வீதங்களில் அறவீடு விதிக்கப்படுதல் வேண்டும்.

4. மேலே குறிப்பிடப்பட்டதன்படி விதிக்கப்பட்ட வரி சேகரிக்கப்படும் நாளில் இருந்து 15 நாட்களுக்குள் அரசின் ஒருங்கிணைந்த நிதியத்திற்கு கையளிக்கப்படல் வேண்டும்.

05. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதி 13 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றுப் பத்திரத்தினைப் பெற்றில்லாத உரிமம் பெற்ற நிறுவனமொன்றினால் தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் அல்லது வர்த்தக விளம்பரங்களை மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும்.

ஒளிபரப்பப்படும் ஏதேனும் தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் அல்லது வர்த்தக விளம்பரங்கள், இலங்கையின் பெறுமானங்கள் இலங்கையின் அடையாளப்படுத்தல் அல்லது இலங்கையின் ஒழுக்க விழுமியங்கள் என்பவற்றைப் பாதிக்கும் வகையிலுள்ளது என செயலாளர் கருதும் பட்சத்தில் அத்தகைய தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் அல்லது வர்த்தக விளம்பரங்களை ஒளிபரப்புவதற்குப் பொருத்தமா என்பது தொடர்பில் தீர்மானமொன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த ஒழுங்குவிதிகள் 11 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குழாமினை அவர் வேண்டிக் கொள்ளலாம். அத்தகைய தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் அல்லது வர்த்தக விளம்பரங்கள் மிகவும் பாதிப்பானவை எனக் குழாம் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் செயலாளர், அத்தகைய சான்றுப் பத்திரத்தினை வழங்குவதற்கு மறுத்தல் வேண்டுமென்பதுடன் அதற்கமைவாக அத்தகைய நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்தலும் வேண்டும். அத்தகைய நிறுவனத்தினைக் குழாமினால் பொருத்தமானதெனத் தீர்மானிக்கப்படும் வகையில் இணங்கியொழுவதற்குக் குழாம் தேவைப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அத்தகைய நிறுவனம் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கு உடன்பட்டால் அத்தகைய மறுப்பிற்குத் திருத்தமொன்றாக அத்தகைய நிபந்தனையினைக் குறிப்பீடு செய்து சான்றுப்பத்திரம் ஒன்றினை வழங்குவதுடன் அத்தகைய நிறுவனம் அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுக வேண்டும் எனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

06. செயலாளர் சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் கலந்தாலோசித்து இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் முப்பது வளவாளர்களுக்கு விஞ்சாத குழுவொன்றை நியமித்தல் வேண்டும். இவர்கள் பட மாளிகை, தொலைக்காட்சி, இலக்கியம், மொழிகள், விஞ்ஞானம், வரலாறு, உளவியல், சட்டம் அத்துடன் இலங்கையின் கலாச்சார விழுமியங்கள் தொடர்பான துறைகளில் தேர்ச்சியையும், அனுபவத்தினையும் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

07. (1) (அ) உரிமம் பெற்ற நிறுவனமொன்று, அது அறவீடு செலுத்துதல் வேண்டுமென சொந்தமாக தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில்; அல்லது

(ஆ) ஒழுங்குவிதி 08 இல் குறிப்பீடு செய்யப்பட்ட விதிவிலக்குகளுக்கு அத்தகைய தொலைக்காட்சி நாடகம் அல்லது திரைப்படம் தகுதி பெறாது என்ற வகையில் ஒழுங்கு விதி 12 இல் தேவைப்படுத்தப்பட்டதற்கு அமைவாக, உரிமம் பெற்ற நிறுவனமொன்றிற்குச் சான்றிதழ் வழங்குதல்.

தொலைக்காட்சி நாடகம் அல்லது திரைப்படத்தின் ஒளி / ஒலி பரப்புவதற்கு நாடும் உரிமம் பெற்ற நிறுவனம் ஒவ்வொன்றும் இந்த ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இல் பகுதி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில் அறவீடுகளைச் செலுத்துதல் வேண்டும்.

(2) (அ) உரிமம்பெற்ற ஒவ்வொரு நிறுவனமும் இந்த ஒழுங்கு விதிகளின் I ஆம் அட்டவணையிலுள்ள பகுதி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில் அறவீடுகளைச் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) உரிமம்பெற்ற ஏதேனும் நிறுவனத்தினால் (முதலாவது குறிப்பிடப்பட்ட உரிமம்பெற்ற நிறுவனம்) செலுத்தப்பட்ட அறவீடானது, முதலாவது குறிப்பிடப்பட்ட உரிமம் வழங்கப்பட்ட நிறுவனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் ஏனைய உரிமம் வழங்கப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருக்கும் எனக் கருதப்படல் வேண்டும்.

அத்துடன் இதற்கமைவாக, அத்தகைய பெயர் குறிப்பிடப்பட்ட உரிமம்பெற்ற நிறுவனமானது இந்த் ஒழுங்குவிதிக்கு ஏற்ற வகையில் செயற்படுதல் வேண்டும். அத்தகைய பெயர் குறிப்பிடப்பட்ட உரிமம்பெற்ற நிறுவுனத்தினால் சமர்ப்பிக்கப்படும் கூற்றினை செயலாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்

08. சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின் கீழ் தொலைக்காட்சி நாடகமொன்றினை அல்லது திரைப்படமொன்றினை ஒளி / ஒலி பரப்புச் செய்ய நாடும் ஒவ்வொரு உரிமம் பெற்ற நிறுவனமும் பின்வரும் பகுதிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஏதேனுமொன்றுக்குள் அடங்கும் அத்தகைய தொலைக்காட்சி நாடகம் அல்லது திரைப்படம் தொடர்பில் அறவீட்டைச் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பினைக் கோரிப் பெற்றுக் கொள்வதற்கு தகுதி பெற.

(அ). விவரணச் சித்திரம் ;

(ஆ). கல்விசார் நிகழ்சித் திட்டங்கள் ;

(இ). சிறுவர்களுக்கு களிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் ;

(ஈ). ஏனைய குறிப்பீடு செய்யப்பட்ட பகுதிகள்:-

(i). சமய நிகழ்ச்சித் திடடங்கள் ;

(ii). சர்வதேச அல்லது பிராந்திய நிகழ்வு ஏதேனும் ;

(iii). சிங்கள, தமிழ் அல்லது ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட மீள் ஒளி / ஒலிபரப்புச் செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகம், அல்லது திரைப்படம் ஏதேனும் ;

(iv). தொலைக்காட்சி நாடகங்கள் அல்லது திரைப்படத்தின் தயாரிப்பில் பெரும்பான்மையானவர்கள் இலங்கைப் பிரசையாகவிருக்கின்ற ஏதேனும் திரைப்படம் தொலைக்காட்சி நாடகமொன்று.

இந்த ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காக,

(i) "பிரதான கதாப்பாத்திரம்" என்பது பிரதான நடிகர், பிரதான நடிகை, துணை நடிகர் மற்றும் துணை நடிகை உள்ளடங்கலாகப் பிரதான பங்கினை வகிக்கும் நடிகர்கள் மற்றும் நடிகைகள் எனப் பொருள்படும்.

(ii) "ஏதேனும் தொலைக்காட்சி நாடகம் அல்லது திரைப்படத்தின் முக்கியமான தயாரிப்புத் பாத்திரங்கள், தயாரிப்புப் பாத்திரங்களின் அரைவாசிக்கு மேற்பட்டோர் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், இசைப் பணிப்பாளர், பிரதான பின்னணி ஆண் மற்றும் பெண் பாடகர்கள் பெரும்பாலானவர்கள் இலங்கைப் பிரசைகளாக இருப்பின் அத் தொலைக்காட்சி நாடகம் அல்லது திரைப்படத்தின் தயாரிப்பாளர்களின் பெரும்பாலானவர்கள் இலங்கைப் பிரசைகளாக இருப்பவர் எனக் கருதப்படல் வேண்டும்."

09. ஏதேனும் தொலைக்காட்சி நாடகம் அல்லது திரைப்படத்தினை ஒளி / ஒலி பரப்புவதற்கு நாடும் உரிமம் பெற்ற நிறுவனம் ஒவ்வொன்றும் ஒழுங்கு விதி 08 இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய வரி விலக்களிப்புக்களைக் கோருவதற்கு உத்தேசிப்பாராயின்இந்த ஒழுங்குவிதிகள் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு படிவத்தில் விண்ணப்பமொன்றினைச் செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

10. அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதும அத்தகைய தொலைக்காட்சி நாடகம் அல்லது சினிமா 08 ஆம் ஒழுங்கு விதியின் கீழ்,வரி விலக்களிக்கப்படுகிறதா இல்லையா என்பதனைத் தீர்மானிப்பதற்காக 11 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள குழாம் ஒன்றுக்கு செயலாளரினால் உருவாக்கப்பட்டுள்ள குழாம் ஒன்றுக்கு அதனைப் பாரப்படுத்தல் வேண்டும்.

11. ஒழுங்குவிதி 09 இன்கீழ், சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து அது தொடர்பான தீர்மானம் எடுப்பதற்காக வேண்டி, ஒழுங்கு விதி 06 இன் கீழ் நியமிக்கப்பட்ட வளவாளர் குழுக்களிடமிருந்து 3 பேருக்கு மேற்படாதவர்களை அத்தகைய குழாமில் செயலாளரினால் நியமிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு குழாமிலும் ஒருவர் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும். செயலாளர் அத்தகைய வளவாளர்களிலிருந்து குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களின் வழிகாட்டலுடன் குழாம்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

12. இக் குழாமானது அதனிடம் ஒப்படைக்கப்பட்ட தொலைக்காட்சி நாடகம் / திரைப்படம் இவ்வொழுங்கு விதிகளின் 08 ஆம் ஒழுங்குவிதிகளின்படி விலக்களிப்புகளுக்கு தகுதியானதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட விடயத்தில் ஒரு தீர்மானத்தை அடையும் பொருட்டு அக்குழாமானது அதன் தீர்மானத்தை இவ்வொழுங்கு விதிகளின் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான படிவத்தில் செயலாளருக்கு அனுப்பி வைப்பதன் மூலம் தெரியப்படுத்தலாம். குழாமின் தீர்மானம் இறுதியானதாகக் கருதப்படும்.

12(அ). ஒழுங்குவிதி 05 அல்லது 12 இன் கீழ் குழாம் ஒன்றின் தீர்மானத்தினால் திருப்தியடையாத உரிமம்பெற்ற ஏதேனும் நிறுவனமொன்று, அத்தகைய நிறுவனத்திற்கு அத்தகைய தீர்மானம் தெரிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் அத்தகைய தீர்மானத்துக்கு எதிராக மேன்முறையீடு ஒன்றினை மேன்முறையீட்டுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேன்முறையீடானது எழுத்திலிருப்பதுடன் மேன் முறையீட்டிற்கான காரணங்களையும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். மேன்முறையீட்டுச் சபையானது ஏதேனும் மேன்முறையீடு கிடைக்கப்பெறின் அதனை விசாரித்து அது கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேன்முறையீட்டினைத் தீர்மானித்தல் வேண்டும்.

இந்த ஒழுங்கு விதியின் நோக்கங்களுக்காக, "மேன்முறையீட்டுச் சபை" என்பது ஒழுங்குவிதி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள வளவாளர் குழுவிலிருந்து செயலாளரினால் தெரிவுசெய்யப்பட்ட நான்கு பேர்களையும் செயலாளர் ஒருவரையும் உறுப்பினர்களாக கொண்டிருக்கும். எவ்வாறாயினும், மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள தீர்மானத்தை வழங்கிய குழாமின் உறுப்பினர் ஒருவராக இருந்த வளவாளர் ஒருவர் மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர் ஒருவராக இருத்தலாகாது. செயலாளர் மேன்முறையீட்டுச் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும். மேன்முறையீட்டுச் சபையின் தீர்மானம் அத்தகைய நிறுவனத்திற்கு செயலாளரினால் கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக அதுவே இறுதி முடிவாக இருத்தல் வேண்டும்.

13. இவ்வொழுங்கு விதிகளின் 07 ஆம் ஒழுங்கு விதியின் பிரகாரம், இந்த ஒழுங்குவிதிகளுக்கு முரணாக உரிமம்பெற்ற ஏதேனும் நிறுவனமொன்று தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் அல்லது வர்த்தக விளம்பரத்தினை ஒளி / ஒலிபரப்புவதற்கு அத்தகைய தொலைக்காட்சி நாடகம் அல்லது திரைப்படம் அல்லது அதன் ஒரு பகுதி அல்லது அங்கத்தினை ஒளி / ஒலிபரப்புவதற்கு நாடியுள்ள தினத்திற்கு அல்லது குறிப்பிட்ட காலநேரத்திற்கு வர்த்தக விளம்பரத்தினை ஒளிபரப்புவதற்கு இரண்டு வாரங்களுக்கு பிந்தாமல் இவ்வொழுங்கு விதிகளிலுள்ள அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் எழுத்து மூலமான அறிக்கையொன்றினை செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கைகளை பெற்றதும் அதிலுள்ள விடயங்களில்

திருப்தியுறும்போது இவ்வொழுங்குவிதிகளில் உள்ள V ஆம் அட்டவணையிலுள்ள படிவத்தில் உரிமம்பெற்ற நிறுவனங்களுக்குச் செயலாளர் சான்றுப்பத்திரங்களை வழங்குதல் வேண்டும்.

14. செயலாளர் காலத்திற்குக்காலம் ஒழுங்குவிதிகள் நியதிகளுக்கேற்ப நியமிக்கப்பட்ட குழாம்களினால் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய வழிகாட்டல்களை வெளியிடுதல் வேண்டும்.

15. இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக,

"உரிமம்பெற்ற நிறுவனம்" என்பது, 1982 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் அல்லது காலத்திற்குக் காலம் இனம் காணப்படும் உரிமம் வழங்க அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய அதிகார சபையினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனமொன்று என்று பொருள்படும் ;

"செயலாளர்" என்பது ஊடகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கு நியமிக்கப்பட்டுள்ள செயலாளர் என்று பொருள்படும் ;

"தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் அல்லது வர்த்தகம்" என்பது இலங்கைக்கு வெளியே தயாரிக்கப்பட்டு, இங்கு கொண்டுவரப்பட்ட அல்லது இலங்கையில் ஒளி/ ஒலிபரப்புச் செய்யும் நோக்கத்திற்காக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் ஏதாவது தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் அல்லது வர்த்தக விளம்பரம் என்று பொருள்படும்.

## அட்டவணை I

*(ஒழுங்குவிதிகள் 3 மற்றும் 7)*

*2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டம்*

தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக அறவீடு

# தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக விளம்பரங்களுக்கு செலுத்த வேண்டிய அறவீட்டு வீதங்கள்

### பகுதி (i)

| வகை | ஒளி / ஒலிபரப்புக் காலம் | | | கட்டண வீதம் (ரூபா.) |
|---|---|---|---|---|
| சிங்களம் அல்லது தமிழில் மீள் ஒளி / ஒலிபரப்புச் செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகம், அல்லது திரைப்படம் | (அ) | முதல் ஒளி/ஒலிபரப்பு, 30 நிமிடங்கள் அல்லது குறைவான காலத்திற்காக | | |
| | | (i) | நாளொன்றுக்கு முதல் 04 ஒளி / ஒலிபரப்புக்களுக்கு | 150,000 |
| | | (ii) | நாளொன்றுக்கு அடுத்து வரும் 04 ஒளி / ஒலிபரப்புக்களுக்கு | 250,000 |
| | | (iii) | நாளொன்றுக்கு ஏஞ்சிய ஒளி / ஒலிபரப்புக்களுக்கு | 350,000 |
| | (ஆ) | மீள் ஒளி/ஒலிபரப்பு, ஒவ்வொரு 30 நிமிடங்கள் அல்லது குறைவான காலத்திற்காக | | |
| | | (i) | நாளொன்றுக்கு முதல் 04 ஒளி / ஒலிபரப்புக்களுக்கு | 50,000 |
| | | (ii) | நாளொன்றுக்கு அடுத்து வரும் 04 ஒளி / ஒலிபரப்புக்களுக்கு | 80,000 |
| | | (iii) | நாளொன்றுக்கு ஏஞ்சிய ஒளி / ஒலிபரப்புக்களுக்கு | 120,000 |
| ஏனைய பிற தொலைக்காட்சி நாடகங்கள் (முதல் ஒளிபரப்பு அல்லது மீள் ஒளிபரப்பு) | ஒவ்வொரு30 நிமிடங்கள் அல்லது குறைவான காலம் | | | 100,000 |
| ஏனைய பிற திரைப்படங்கள | (அ) | முதல் ஒளிபரப்பு | | 200,000 |
| | (ஆ) | மீள் ஒளிபரப்பு | | 100,000 |

### பகுதி (ii)

| வகை | ஒளி / ஒலிபரப்புக் காலம் | | கட்டண வீதம் (ரூபா.) |
|---|---|---|---|
| வர்த்தக நிகழ்ச்சித் திட்டங்கள் | உரிமமளிக்கப்பட்ட நிறுவனத்தினால் சான்றுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட தினம் முதல் ஒலி/ஒளி பரப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கைக்கு அமைய | | |
| | (அ) | சான்றுப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 183 நாட்களைக் கொண்ட காலத்திற்கு | 500,000 |
| | (ஆ) | சான்றுப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 365 நாட்களைக் கொண்ட காலத்திற்கு | 1,000,000 |

**அட்டவணை II**

(ஒழுங்குவிதி 9)

*2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டம்*

தொலைக்காட்சி, நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக அறவீடு

# ஒளி/ஒலி பரப்பு சான்றுதழுக்கான விண்ணப்பம்

1. உரிமம் பெற்ற நிறுவனத்தின் பெயர் : ........................................................
2. முகவரி : ........................................................................................
   ........................................................................................................
3. தொலைப்பேசி/தொலை நகல் இல : ........................................................
4. ஒளி / ஒலிபரப்பப்படவுள்ள தொலைக்காட்சி நாடகம் / திரைப்படத்தின் தலைப்பு : ...
   ........................................................................................................
5. ஒழுங்குவிதிகளின் எந்த வகுதியின் கீழ் விதிவிலக்கு கோரப்படுவது பற்றி : ...........
   ........................................................................................................
6. விதிவிலக்குக் கோரிக்கைக்கான துணைக் காரணிகள் (தனியானதொரு கடதாசியை இணைக்கவும்.): ........................................................................................
   ........................................................................................................

மேற்சொன்ன தகவல்கள் சரியானவை என்றும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேலே 04 ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்ட தொலைக்காட்சி நாடகம் / திரைப்படத்தின் பிரதியை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

.................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

விண்ணப்பதாரரின் பெயரும் : ........................................................

விண்ணப்பதாரரின் பதவியும் : ........................................................

திகதி: ................................

**அட்டவணை III**

(ஒழுங்குவிதி 12)

*2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டம்*

தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக அறவீடு

## சான்றுதழ்

சான்றிதழில் தொடர் இல:.................

செயலாளர்,
ஊடகத்துறை அமைச்சு.

உரிமம் பெற்ற நிறுவனத்தின் பெயர் : ............................................................

தொலைக்காட்சி / திரைப்பட தலைப்பு : ..........................................................

மேலே குறிப்பிடப்பட்ட தொலைக்காட்சி நாடகம் / திரைப்படம் தொடர்பில்,

(அ) ஒழுங்குவிதி 07 இன் கீழ் அறவீடு விலக்களிப்பதற்குத் தகுதி பெறவில்லை. அத்துடன் இது அறவீடு செலுத்துவதற்கு தேவைப்படுகின்றது எனவும்;

அல்லது

(ஆ) ஒழுங்குவிதி 07 இன் கீழ் அறவீடு விலக்களிக்கப்படுவதற்கு தகுதியானது எனவும்;

கீழ் குறிப்பிடப்படும் குழாம் உறுப்பினர்களாகிய நாம் திருப்தியுறுகிறோம் என சான்றுபகர்கிறோம்.

குழாம் உறுப்பினர்கள் :

| பெயர் | கையொப்பம் |
|---|---|
| ............................................................ | .................................. |
| ............................................................ | .................................. |
| ............................................................ | .................................. |

திகதி: .......................

**(தேவையற்றதை நீக்கிவிடுக.)**

## அட்டவணை IV

(ஒழுங்குவிதி 13)

*2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்*
தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக அறவீடு

## கூற்று

(பகுதி (i) அல்லது பகுதி (ii) இல் பொருத்தமான ஒன்றினைப் பூரணப்படுத்துக.)

### பகுதி (i)
### தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள்

| | தொலைக்காட்சி நாடகம் அல்லது திரைப்படம் | அறவீடு விதிக்கத் தக்கது / விலக்களிக்கப்பட்டது | ஒளி / ஒலிபரப்பு நேர அளவு | *ஒளி/ ஒலிபரப்புக் காலம் | விதிக்கத்தக்கதாயின் அறவீடாகச் செலுத்தப்பட்ட தொகை (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |

**தயவு செய்து ஒளி/ ஒலிபரப்புச் செய்வதற்கு உத்தேசித்துள்ள மாதங்களையும் வருடத்தினையும் குறிப்பிடுக.*

### பகுதி (ii)
### வர்த்தக விளம்பரங்கள்

| | அடையாளம் | ஒளி / ஒலிபரப்பு நேர அளவு | *ஒளி/ ஒலிபரப்புக் காலம் | அறவீடாகச் செலுத்தப்பட்ட தொகை (ரூபா.) |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

**தயவு செய்து ஒளி/ ஒலிபரப்புச் செய்வதற்கு உத்தேசித்துள்ள மாதங்களையும் வருடத்தினையும் குறிப்பிடுக.*

மேலே குறிப்பிடப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள்

(அ) ஒளி/ ஒலிபரப்புக்காக இந்த ஒழுங்குவிதிகளில் தேவைப்படுத்தப்பட்டுள்ள அறவீடுகள் செலுத்தப்பட்டுள்ளன : அல்லது

(ஆ) ஒழுங்குவிதி 11 இன் கீழ் விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது : அத்துடன்

(இ) (i) மேற்கூறிய அறவீடு செலுத்தியதற்கான ஆதாரமாக பற்றுச்சீட்டு அல்லது

(ii) ஒழுங்குவிதி 10 இன் கீழ் வெளியிடப்பட்ட சான்றிதழ்

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

உறுதியளிப்பவரின் கையொப்பம் : ................................
பெயரும் பதவியும் : ..................................................
உரிமம் பெற்ற நிறுவனத்தின் பெயர் : .............................
திகதி: ..............................................................

**(தேவையற்றதை நீக்கிவிடுக.)**

**அட்டவணை V**

(ஒழுங்குவிதி 13)

*2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்*

தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக அறவீடு

## ஒளி/ஒலி பரப்பிற்கான சான்றிதழ்

உரிமம்பெற்ற நிறுவனத்தின் பெயர் : ..........................................................................

தொலைக்காட்சி நாடகம் / திரைப்படம் / வர்த்தகத்தின் பெயர் : ...........................

ஒழுங்குவிதி 11 இன் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழின் தொடர் இல : ........................

தங்களது .................................... ஆந் திகதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தகங்களை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள திகதி.˙. திகதி மற்றும் கால எல்லையினுல் ஒளி / ஒலிபரப்புச் செய்யவதற்கு இத்தால் அனுமதியளிக்கப்படுகிறது.

அனுமதி காலாவதியாகும் திகதி : ....................................

.......................................... ........................

(கையொப்பம்) திகதி

செயலாளர், ஊடகத்துறை அமைச்சு.

**(தேவையற்றதை நீக்கிவிடுக.)**